# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

# வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், அக்ரஹார மருத்துவ காப்புறுதி, மோட்டார் வாகன காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களை செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள் காப்புறுதியாக செயற்படும் இலங்கைக்குள் நிறுவப்பட்டிருக்கும் ஒரே நிறுவனமாகும். இந்த நிதியம் 18 ஆண்டுகளாகிய குறுகிய காலத்திற்குள் புதுமை, மேம்பாடு மற்றும் வருவாயை கருத்தில்கொள்ளும்போது உள்நாட்டு காப்புறுதித் தொழில்துறையில் முதன்மை இடத்தை பெற்றுள்ள அரச நிறுவனமாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு தகுதிபெற்ற ஒருவரை இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைகளுக்கு அமைய நிதியத்தின் குறிப்பிட்ட அதிகாரி (Specified Officer) பதவியிலும் செயற்படுதல் வேண்டும்.

### பிரதி பொது முகாமையாளர் – காப்புறுதி (HM 2-1)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி மற்றும் இடர் முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், காப்புறுதியில் வர்த்தக முகாமைத்துவம், வர்த்தகம், நிதி, சந்தைப்படுத்தல் துறையில் பட்டம் அல்லது பதவியின் விடயப்பரப்புக்கு தொடர்புடைய வேறு ஏதேனும் பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

ஐ.இ. பட்டய காப்புறுதி நிறுவனத்தில் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் (ACII) இணை அங்கத்துவம்

மற்றும்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 18 ஆண்டுகள் அனுபவம் அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும்.

உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகருக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.
2. இந்த பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவு (HM 1-3) பதவி ஒன்றில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

3. ஐ.இ. பட்டய காப்புறுதி நிறுவனத்தில் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் (ACII) இணை அங்கத்துவம்

சம்பள அளவு : HM 2-1 -2025- ரூபா [161,140 - 12 x 4,850 – 219,340]
(01/2025 DMS சுற்றுநிருபத்தின்படி 2025.01.01 தொடக்கம் ரூபா 119,494.00, 2026.01.01 தொடக்கம் ரூபா 140,317.00 மற்றும் 2027.01.01 தொடக்கம் ரூபா 161,140.00)

மற்ற கொடுப்பனவு:

- போக்குவரத்துக் கொடுப்பனவு (01/2025 (i) ஆம் இலக்க PED சுற்றுநிருபத்தின்படி)
- எரிபொருள் கொடுப்பனவு (01/2025 (ii) ஆம் இலக்க PED சுற்றுநிருபத்தின்படி)
- தொழில்முறை கொடுப்பனவு (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி)
- மருத்துவ காப்புறுதித் திட்டம்

வயது : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

நியமனத்தின் பண்பு

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடைய நிரந்தரமானது.

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள்

- தகைமைகளை நிரூபிப்பதற்கு கல்வித் தகைமைகள், தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர் மற்றும் முகவரி, சுயவிபரக்கோவை உள்ளடங்கிய விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், ஏற்கனவே அரச/ கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளில் உள்ள பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களையும் 2025.08.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைமை நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைமை நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02**